# <u>அரச பாடசாலைகளில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு நியமித்தல்</u>

மத்திய கல்வி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்கமைய நடாத்தப்பட்ட தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோக நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய, வடக்கு மாகாணத்தில் நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியல் வட மாகாண கல்வி அமைச்சிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

2) இதனமைவில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக, **யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் 14.06.2018 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.00 மணிக்கும், ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 15.06.2018 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கும்** கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் நிழற்பிரதிகளுடன் **செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் அமைந்துள்ள **வட மாகாண கல்வி அமைச்சிற்கு** வருகைதருமாறு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அவர்கள் அறிவித்துள்ளார்.

2.1 தேசிய அடையாள அட்டை (தேசிய அடையாள அட்டை இல்லாதவிடத்து செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது உமது ஆளடையாளத்தை நிரூபிக்கும் புகைப்படத்துடன் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆவணங்கள்.

2.2 பிறப்புப் பதிவுப் புத்தகம் (பெயரில் வித்தியாசமிருப்பின் சத்தியக் கடதாசி சமர்ப்பித்தல் வேண்டும்)

2.3 விவாகச் சான்றிதழ் (திருமணமான பெண்கள் மட்டும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்)

2.4 க.பொ.த.(சா/த) சான்றிதழ்

2.5 விளையாட்டுத் தகைமையினை நிரூபிக்கும் சான்றிதழ்கள்

2.6 வேறு விசேட தகைமைகள் இருப்பின் அவை தொடர்பான சான்றிதழ்கள்